# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2014 ஆகஸ்ட் திங்கள் 26–ம் நாள்(26.08.2014) செவ்வாய்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சியில் 68–வது சுதந்திர தினவிழா ஆகஸ்ட் 15–ம் நாள் கொண்டாடப்பட்டது. இதற்கு தேவையான கொடிகள் மற்றும் இனிப்புகள் வாங்கிய வகையில் ரூ.2,115/–ஐ இந்நகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/2165/2014)

**தீர்மானம் எண்.973 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்கு லியோண்நகர் உப்பளம் புறம்போக்கு பகுதியில் உரக்கிடங்கு அமைப்பதை எதிர்த்து சென்னை பசுமை தீர்ப்பாயத்தில் திரு.T.செந்தில் ஆதிபன் என்பவரால் தொடரப்பட்டுள்ள வழக்கு எண்.121/2014–க்கு நகராட்சி சார்பாக ஆஜரான வகையில் ரூ.25,000/– வழக்கு கட்டணமாக வழங்குமாறு திரு.பி.சீனிவாஸ், அரசு சிறப்பு வழக்கறிஞர் கோரியுள்ளார். எனவே மேற்படி வழக்கு கட்டணத்தை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1488/2014)

**தீர்மானம் எண்.974 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வெள்ளியாகுளத்தில் பாம்பூரி வாய்க்காலின் நீரை தேக்கி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக வெள்ளியாகுளத்தை சுற்றி பக்க சுவர்கள் மற்றும் படித்துறை அமைக்கும் பணியினை நகராட்சி மூலம் மேற்கொள்வதற்கு பொதுப்பணித் துறையை கேட்டுக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2092/2014)

**தீர்மானம் எண்.975 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்கு சொந்தமான காம்பேக்டர் லாறியில் கிளச் பழுதாகியுள்ளதால் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பழுதினை சரி செய்த வகையில் ரூ.6,000/– பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1841/2013)

**தீர்மானம் எண்.976 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சி குடிநீர் லாரி TN.74-Z-5304–ன் தகுதி சான்றினை புதுப்பிப்பதற்காக ரூ.48,000/– மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.876 நாள் 30.05.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 26.06.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.கே.எஸ்.எஸ்.எஸ்.ஆட்டோமொபைல்ஸ், ஆசாரிப்பள்ளம் ரோடு, நாகர்கோவில். | மதிப்பீட்டைவிட 0.52% அதிகம். |
| 2. | M/s.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில். | மதிப்பீட்டு விலை விகிதம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் நிறுவனத்தின் மதிப்பீட்டு விலை விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணியின் அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று M/s.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/796/2014)

**தீர்மானம் எண்.977 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3–ல் பழுதடைந்த வடிகால் ஓடைகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு மேல்மூடி அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.2,20,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.966 நாள் 30.07.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 12.08.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.67% அதிகம். |
| 2. | திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.03% குறைவு. |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 0.03% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1494/2014)

**தீர்மானம் எண்.978 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலைய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் கிழக்கு பக்கம் தீயணைப்பு ஊர்திக்கு புதிதாக Shed அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.3,50,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.956 நாள் 30.07.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 12.08.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.98% அதிகம். |
| 2. | திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.இ1/1856/2014)

**தீர்மானம் எண்.979 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட மீன் விற்பனைக்கூடத்தில் Ramp வசதி செய்வதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,75,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.967 நாள் 30.07.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 12.08.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.86% அதிகம். |
| 2. | திரு.S.டேவிட்ராஜ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.டேவிட்ராஜ், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.இ1/1565/2014)

**தீர்மானம் எண்.980 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள சாலைகள், வடிகால் ஓடைகள், குடிநீர் வினியோக வால்வு பிட்டுகள் குடிநீர் இணைப்புகள் வழங்கும் போது ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கான வருடாந்திர பராமரிப்பு பணிகள் 2014–15–க்கான மதிப்பீட்டு தொகை ரூ.4,50,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.953 நாள் 30.07.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 12.08.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 1.04% அதிகம். |
| 2. | திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 0.02% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1826/2014)

**தீர்மானம் எண்.981 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்குட்பட்ட பொட்டல் பகுதியில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் புதிதாக படிக்கட்டுகள், கைப்பிடி சுவர் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,30,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.773 நாள் 26.11.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 12.08.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின்ஜோஸ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 1.04% அதிகம். |
| 2. | திரு.C.தேவராஜ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.இ1/3852/2014)

**தீர்மானம் எண்.982 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சி கணனி பிரிவிற்கு தேவையான 14 எண்ணங்கள் புதிய Tubular battery–கள் வாங்குவதற்கும், ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மீட்டர் பெட்டி அறையில் UPS மற்றும் பேட்டரிகள் வைப்பதற்கு ஏதுவாக கணனி அறையிலிருந்து கேபிள் அமைப்பதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,30,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.960 நாள் 30.07.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 14.08.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/S.Environ India, Nagercoil. | 0.09% மதிப்பீட்டைவிட குறைவு. |
| 2. | M/S.Kevin Components, Chennai. | 0.65% மதிப்பீட்டைவிட அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/S.Environ India, Nagercoil. நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 0.09% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ2/3562/2007)

**தீர்மானம் எண்.983 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13, துறைமுகத்தெரு–1–ல் அமைந்துள்ள மீனவர் ஓய்வறைகளின் மேற்கூரை மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதால், மழைக்காலங்களில் ஒழுக்கு ஏற்பட்டு, மேற்கூரை இடிந்து விழும் நிலையில் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்படி ஓய்வறைகளில் புதிதாக காங்கிரீட் தூண் மற்றும் பீம் அமைத்து மேற்கூரைகளை சரி செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக ரூ.1,90,000/– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 12.08.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.04% குறைவு. |
| 2. | திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.72% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**:1) மேற்படி பணிக்கான மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.1,90,000/—க்கு, பணியின் அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரரின் மதிப்பீட்டைவிட 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3) மதிப்பீட்டு தொகை ரூ.1,90,000/—ஐ இந்நகராட்சியின் பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/1994—1/2014)

**தீர்மானம் எண்.984 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரை வெள்ளிப்பிள்ளையார் கோவில் குடிநீரேற்றும் நிலையம் எண்.4 மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதால், மழைக்காலங்களில் மேற்கூரையில் ஒழுக்கு ஏற்பட்டு மோட்டார்கள் இயக்குவதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்படி கட்டிடத்தை இடித்து அகற்றிவிட்டு அதே இடத்தில் புதிதாக குடிநீரேற்றும் நிலையம் (Pump Room) அமைப்பதற்கு ரூ.3,00,000/— க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின்ஜோஸ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.68% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 0.02% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**:1) மேற்படி பணிக்கான மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.3,00,000/—க்கு, பணியின் அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் மதிப்பீட்டைவிட 0.02% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3) மதிப்பீட்டு தொகை ரூ.3,00,000/—ஐ இந்நகராட்சியின் பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/151/2014)

**தீர்மானம் எண்.985 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்காக நிறுவப்பட்டுள்ள 4 ஜெனரேட்டர்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கு ஏதுவாக 2014–15–ம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3,00,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.972 நாள் 30.07.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 21.08.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/S.Vasan Electronics Tirunelveli. | மதிப்பீட்டைவிட 9.83% அதிகம். |
| 2. | M/S.Phoenix Engineers Tirunelveli. | மதிப்பீட்டு விகிதம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/S.Phoenix Engineers, Tirunelveli நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1905/2014)

**தீர்மானம் எண்.986 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு–1–ல் கதவு எண்.15–6 கட்டிடத்தின் பின்புறம் வடிகால் ஓடையினை உயர்த்தி அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,50,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.959 நாள் 30.07.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 20.08.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. |
| 2. | திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.47% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 0.02% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1842/2014)

**தீர்மானம் எண்.987 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் அமைந்துள்ள கதவு எண்.18–24, மனுதாரர் திரு.ஜோசப் என்பவரின் குடிநீர் இணைப்பு 20.02.2013 அன்று துண்டிப்பு செய்யப்பட்டது. மனுதாரர் மீண்டும் துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பு வழங்க கோரி விண்ணப்பம் செய்துள்ளார். மேற்கண்ட கதவு எண்.18–24–ன்மீது வரி நிலுவைத் தொகை ஏதும் இல்லை. எனவே மனுதாரின் வேண்டுகோளை ஏற்று துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பினை மீண்டும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1949/2014)

**தீர்மானம் எண்.988 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் அமைந்துள்ள கதவு எண்.13–93, மனுதாரர் திரு.அல்போன்ஸ் என்பவரின் குடிநீர் இணைப்பு 09.05.2014 அன்று துண்டிப்பு செய்யப்பட்டது. மனுதாரர் மீண்டும் துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பு வழங்க கோரி விண்ணப்பம் செய்துள்ளார். எனவே மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று கதவு எண்.13–93–ல் உள்ள துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பினை மீண்டும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1909/2014)

**தீர்மானம் எண்.989 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

**குளச்சல் நகர்மன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் கி.பென்சிகர், மு.அப்துல் ரஹீம் மற்றும் மு. நூர்முகம்மது ஆகியோர் கொண்டுவரும் தீர்மானம் :**

இந்நகராட்சியின் புதிய உரக்கிடங்கு அமைக்கும் பணிகள் முடிவடைந்து செயல்பட துவங்கி விட்டதால், இதற்கு முன்பு குப்பைகள் கொட்டுமிடமாக பயன்படுத்திய இந்திரா காலனி பகுதியில் காணப்படும் குப்பைகளை அகற்றி விட்டு, மேற்படி இடத்தில் சிறுவர் பூங்கா மற்றும் நவீன ஆடு, மாடு வதைக்கூடம் ஆகியவை அமைப்பதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.990 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2014 ஆகஸ்ட் திங்கள் 26–ம் நாள்(26.08.2014) செவ்வாய்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரிச்சந்தையில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கடைகளை இடித்து அகற்றி விட்டு ரூ.1,20,00,000/– மதிப்பீட்டில் புதிதாக நவீன வணிக வளாகம் அமைப்பதற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.968 நாள் 30.07.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. எனவே டாக்டர் அம்பேத்கார் தினசரிச் சந்தையின் பெயரை டாக்டர் அம்பேத்கார் வணிக வளாகம் என மாற்றி அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/20358/2002)

**தீர்மானம் எண்.991 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் போர் வெற்றித்தூண் அருகில் அமைக்கப்பட்டுள்ள பூங்கா நுழைவாயிலில் ‘‘குளச்சல் நகராட்சி – போர் வெற்றித்தூண் பூங்கா’’ என்ற வாசகம் பதித்த Arch type LED விளக்குகள் அமைக்கவும், பூங்காவிற்கு தேவையான மின்விளக்குகள் அமைப்பதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ. 3,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2175/2014)

**தீர்மானம் எண்.992 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையம் அருகில் உள்ள பழுதடைந்த 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 16 மீட்டர் உயரம் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு பதிலாக புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டி முடிக்கப்பட்டு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பயன்பாடின்றி மிகவும் மோசமாக பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால், அப்பகுதி பொதுமக்கள் மற்றும் கட்டிடங்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, 16 மீட்டருக்கு சாரம் அமைத்து மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினை இடித்து மாற்றுவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,80,000/–க்கும், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இடித்து மாற்றப்படும் போது கிடைக்கும் கம்பிகளை பொது ஏலம் விடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2176/2014)

**தீர்மானம் எண்.993 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு போர் வெற்றித்தூண் பூங்கா முன்புறம் சாலை குண்டும் குழியுமாக உள்ளது. தற்போது பூங்காவை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளதால் பூங்காவின் முன்புறம் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி சேறும் சகதியுமாக காட்சியளிக்கிறது. எனவே பூங்காவை அழகுபடுத்தும் விதமாக பூங்காவின் முன்புறம் பேவர் பிளாக் சாலை அமைக்கவும், பூங்காவின் உட்புறம் கழிவறை வசதிகள் மேற்கொள்ளவும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.8.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2178/2014)

**தீர்மானம் எண்.994 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு போர் வெற்றித்தூண் பூங்கா அருகில் உள்ள பழுதடைந்த 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 16 மீட்டர் உயரம் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு பதிலாக புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டி முடிக்கப்பட்டு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பயன்பாடின்றி மிகவும் மோசமாக பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதாலும், அப்பகுதியில் மக்கள் புழக்கம் அதிகம் உள்ளதாலும், போர் வெற்றித்தூண் பூங்கா அருகில் அமைந்துள்ளதாலும், பொதுமக்கள் மற்றும் கட்டிடங்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, 16 மீட்டருக்கு சாரம் அமைத்து மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினை இடித்து மாற்றுவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/–க்கும், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இடித்து மாற்றப்படும் போது கிடைக்கும் கம்பிகளை பொது ஏலம் விடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2177/2014)

**தீர்மானம் எண்.995 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு போதுமான துப்புரவு பணியாளர்கள் இல்லாமையால் பொது சுகாதார நலன் கருதி, டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைக்காக 10 துப்புரவு பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.எ1/110610/2013 நாள் 25.04.2013–ல் தெரிவிக்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை பணியமர்த்த 89 நாட்களுக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.923 நாள் 23.06.2014–ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டு, 01.06.2014 முதல் பணியமர்த்தப்பட்டு 30.08.2014–வுடன் முடிவடைகிறது. மேலும் தற்போது மழைக்காலம் தொடங்கியுள்ளதால் நீர்தேங்கி கொசுப்புழு உற்பத்தியாவதை தடுக்கவும், முதிர் கொசுக்களை அழிக்கவும், வடிகால்களை தூர் வாரவும் மேலும்

89 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்யவும், அதற்காக உத்தேச செலவு ரூ.3,00,000/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1177/2014)

**தீர்மானம் எண்.996 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

**குளச்சல் நகர்மன்ற 23—உறுப்பினர் திருமதி.ற்றி. ஜி. லதா கொண்டுவரும் தீர்மானம் :**

இந்நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் வாய்க்கால் ஆண்கள் படித்துறை முதல் வெள்ள மணல் கோயில் வரையிலான பகுதி மிகவும் மோசமாக குண்டும், குழியுமாக காணப்படுவதால் மழைக்காலங்களில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறு ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்படி வழித்தடத்தில் மண் நிரப்புவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.997 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சி பொதுப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு கணனிகளும் பாதுகாப்பான முறையில் தனி அறையில் இல்லாத காரணத்தால் தூசு படிந்து பழுது ஏற்படுகிறது. எனவே Aluminum Anodized Fabrication மூலம் தனி அறை அமைப்பதற்கும், மேலும் புதிதாக இரண்டு கணனி மேஜைகள் வாங்குவதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.40,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.இ1/2179/2014)

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.998 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள உரக்கிடங்கில் குப்பைகளை மக்கச் செய்வதற்கு பயன்படுத்தப்படும் E.M.I உயிர் திரவம் இருப்பில் இல்லாததால் மேற்படி கிருமி நாசினி வாங்குவதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ.25,500/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.எச்1/1243/2013)

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.999 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்கு சொந்தமான இந்திராகாலனி குப்பைக்கிடங்கில் குப்பைகள் நிறைந்துவிட்டமையால் மேற்படி குப்பைகளை அப்புறப்படுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.6,00,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.எச்1/608/2014)

**தீர்மானம் எண்.1000 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி